சார்பு நீதிமன்றம், செய்யாறு, திருவண்ணாமலை மாவட்டம்.

எம்.சி.ஓ.பி.எண். 40/2021

| | | |
|---|---|---|
| மனுதாரர் தரப்பு சாட்சி | .. | 1 |
| பெயர் | .. | யாகூப் பாஷா |
| தகப்பனார் / கணவர் பெயர் | .. | |
| தொழில் | .. | |
| கிராமம் | .. | |
| தாலுக்கா | .. | |

2024 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 27ஆம் நாள் செவ்வாய்கிழமை திரு. சி. குமாரவர்மன், எல்.எல்.எம்., சார்பு நீதிபதி, செய்யாறு அவர்களின் முன்னிலையில் உரிமையியல் நடைமுறைச்சட்டம் மற்றும் விதிகளின் படி உறுதி செய்யப்படுகிறது.

**முதல் விசாரணை**

நான் மனுவில் மனுதாரர். எனது சாட்சியத்தை நிரூபண வாக்குமூலமாக தாக்கல் செய்கிறேன். அதில் உள்ள விபரங்கள் என்னால் சொல்லப்பட்டது. நிரூபண வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்துக்கள் என்னுடையதுதான். எனது தரப்பில் கீழ்கண்ட ஆவணங்களை தாக்கல் செய்கிறேன். முதல் தகவல் அறிக்கை ம.சா.ஆ.1, விபத்து பதிவேடு ம.சா.ஆ.2, மனுதாரர் ஆதார் அட்டை ம.சா.ஆ.3, யாகூப் பாஷா ஓட்டுநர் உரிமம் ம.சா.ஆ.4, பாஸ்கர் ஓட்டுநர் உரிமம் ம.சா.ஆ.5, வாகன பதிவுச்சான்று ம.சா.ஆ.6, வாகன காப்பீட்டு சான்று ம.சா.ஆ.7, தூசி காவல்நிலைய குற்ற எண். 76/2019 வழக்கில் தாக்கல் செய்யப்பட்டுள்ள இறுதி அறிக்கை ம.சா.ஆ.8, புகார் மனு ம.சா.ஆ.9, மோட்டார் வாகன ஆய்வாளருக்கு தூசி காவல் நிலைய உதவி ஆய்வாளர் அனுப்பிய கடிதம் ம.சா.ஆ.10, மோட்டார் வாகன ஆய்வாளர் அறிக்கை ம.சா.ஆ.11, மோட்டார் வாகன ஆய்வாளர் அறிக்கை ம.சா.ஆ.12, சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை ம.சா.ஆ.13, காவல் துறையினர் தயார் செய்த மாதிரி வரைபடம் ம.சா.ஆ.14, மருத்துவமனையில்

சிகிச்சை பெற்றதற்கான நோட்டு புத்தகம் ம.சா.ஆ.15. (ம.சா.ஆ.3 மற்றும் 15 அசலுடன் சரிபார்க்கப்பட்டு குறியீடு செய்யப்படுகிறது)

**3ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை**

விபத்து தூசியில் இருந்து வந்தவாசி செல்லும் காஞ்சிபுரம் பாலத்திற்கு கீழே நடந்தது. விபத்து நடந்த இடம் காஞ்சிபுரம் மாவட்ட எல்லையை சேர்ந்த பகுதி என்றால் சரியல்ல. மனுவிலும், முதல் விசாரணை உறுதிக்கூற்றிலும் விபத்து எந்த இடத்தில் நடந்தது என்று சொல்லவில்லை என்று சொன்னால் சொல்லியுள்ளேன். மனுவிலும், முதல் விசாரணை உறுதிக்கூற்றிலும் விபத்து எந்த இடத்தில் நடந்தது என்று சொல்லவில்லை என்றால் சரியல்ல. ம.சா.ஆ.14ன் படி விபத்து சாலையின் மத்தியில் நடந்துள்ளது என்றும், நான் சாலையின் இடதுபுறமாக செல்லவில்லை என்று சொன்னால் சரியல்ல. 1ம் எதிர்மனுதாரர் வாகனமும், என்னுடைய வாகனமும் சேதாரம் அடைந்துள்ளது என்று சொன்னால் என்னுடைய வாகனம் சேதாரம் அடைந்துள்ளது, 1ம் எதிர்மனுதாரர் வாகனம் சேதாரம் அடைந்துள்ளது பற்றி தெரியாது. 1ம் எதிர்மனுதாரருக்கும் காயம் ஏற்பட்டுள்ளது என்று சொன்னால் எனக்கு தெரியாது. நான் அதிவேகமாக சென்றதால் தான் விபத்து ஏற்பட்டு 1ம் எதிர்மனுதாரருக்கும் காயம் ஏற்பட்டது என்றால் சரியல்ல. வாகித் என்பவர் என்னுடைய அண்ணன். விபத்தை நான் ஏற்படுத்திவிட்டு என்னுடைய அண்ணன் 1ம் எதிர்மனுதாரர் மீது பொய்யாக புகார் கொடுத்துள்ளார் என்றால் சரியல்ல. நான் ஓட்டுநராக வேலைபார்த்து வருகிறேன். நான் ஓட்டுநராக வேலைபார்த்து வருவதற்கு எந்த ஆவணமும் தாக்கல் செய்யவில்லை. அரசு மருத்துவமனையில் தான் சிகிச்சை பெற்றுக்கொண்டேன். முகத்தில் தாடையில் அடிப்பட்டிருந்தாலும் வாகனத்தை ஓட்டலாம் என்றும், எனக்கு எந்தவித வருமான இழப்பும் ஏற்படவில்லை என்றால் சரியல்ல. நான் சொல்வதுபோல் எனக்கு வருமான இழப்பு எதுவும் ஏற்படவில்லை என்றால் சரியல்ல. காலம் 21எ-யில் கூறியுள்ளவாறு எனக்கு இழப்பு எதுவும் ஏற்படவில்லை என்றால் சரியல்ல. கோரியுள்ள இழப்பீட்டு தொகை அதிகம் என்றும், எனக்கு சாதாரண காயங்கள்

தான் ஏற்பட்டுள்ளது என்றும் சொன்னால் சரியல்ல. விபத்து என்னுடைய கவனக்குறைவால் தான் ஏற்பட்டுள்ளது என்றும், அதனால் 2, 3 எதிர்மனுதாரர்கள் எனக்கு எந்த இழப்பீட்டு தொகையும் செலுத்த கடமைபட்டவர்கள் இல்லை என்றால் சரியல்ல. மனு தள்ளுபடியாக வேண்டுமென்றால் சரியல்ல.

**1ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை**

விபத்து நடந்தபோது நானும் இருசக்கர வாகனத்தில் தான் சென்றேன். திருவண்ணாமலை மாவட்ட எல்லை முடிந்து காஞ்சிபுரம் மாவட்ட எல்லை ஆரம்பிக்கும் இடத்தில் பேரிகாட் வைத்திருந்த இடத்தில் விபத்து நடந்தது என்று சொன்னால் இல்லை, பேரிகாட் அதற்கு முன்பாக உள்ளது. விபத்து நடந்த இடத்திற்கும், பேரிகாட் உள்ள இடத்திற்கும் 100 அடி வித்தியாசம் இருக்கும். விபத்து நடந்த இடத்தில் வேகமாகவே போகமுடியாது என்றும், 1ம் எதிர்மனுதாரர் அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும் இருசக்கர வாகனத்தை ஓட்டிவந்து விபத்து ஏற்படுத்தியதாக தவறாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. 2ம் எதிர்மனுதாரர் வாகனம் விபத்து தேதியில் 3ம் எதிர்மனுதாரரிடம் காப்பீடு செய்யப்பட்டிருந்தது என்றால் தெரியாது. விபத்து என்னுடைய கவனக்குறைவால் தான் ஏற்பட்டது என்றும், 1ம் எதிர்மனுதாரர் கவனக்குறைவால் ஏற்படவில்லை என்றால் சரியல்ல. விபத்து தேதியில் 2ம் எதிர்மனுதாரர் வாகனம் 3ம் எதிர்மனுதாரரிடம் காப்பீடு செய்யப்பட்டிருந்ததால் இழப்பீடு வழங்கவேண்டும் என்றாலும் 3ம் எதிர்மனுதாரர் தான் வழங்கவேண்டும் என்றால் விபத்து ஏற்படுத்தியது 1ம் எதிர்மனுதாரர் தான். 1ம் எதிர்மனுதாரரை பொறுத்து மனு தள்ளுபடியாகவேண்டும் என்றால் சரியல்ல.

மறுவிசாரணை

இல்லை.